**மாகாணக் கல்வித் திணைக்களம்**
**வடக்கு மாகாணம்**
**சுய கற்றல் கையேடு - 2020**
**கர்நாடக சங்கீதம்**

**தரம் 9**

☞ வழிகாட்டி - 1

# சப்ததாளங்களும் அங்க அடையாளங்களும்.

- கர்நாடக சங்கீதத்தில் பிரதானமாக ஏழுதாளங்கள் உள்ளன. அவையே சப்ததாளங்கள் என்று அழைக்கப்படுகின்றது.
- அவையாவன:- த்ருவதாளம், மட்டியதாளம், ரூபகதாளம், ஜம்பைதாளம், திரிபுடைதாளம், அடதாளம், ஏகதாளம். என்பனவாகும்.
- இத் தாளங்களையும் அதற்குரிய அங்க அடையாளங்களையும் ஓர் அட்டவணையில் பார்ப்போமாயின்.

| இல | தாளத்தின் பெயர் | அங்க அடையாளம் | அங்கங்களின் பெயர் |
|---|---|---|---|
| 01 | த்ருவதாளம் | Ioll | லகு, துருதம், லகு, லகு |
| 02 | மட்டியதாளம் | Iol | லகு, துருதம், லகு |
| 03 | ரூபகதாளம் | ol | துருதம், லகு |
| 04 | ஜம்பைதாளம் | IUo | லகு, அனுத்ருதம் |
| 05 | திரிபுடைதாளம் | Ioo | லகு,துருதம்,துருதம் |
| 06 | அடதாளம் | IIoo | லகு, லகு, துருதம், துருதம் |
| 07 | ஏகதாளம் | I | லகு |

# கீர்த்தனையின் இலட்சணம்

- ❖ கீர்த்தனையானது இறையிசைப் பகுதியைச் சார்ந்தது. அதாவது வைதீக கானத்தைச் சேர்ந்த ஓர் உருப்படியாகும்.
- ❖ இதன் சாஹித்யமானது இறைவன் அல்லது இறைவியைப் புகழ்வதாகவோ அல்லது மன்னிப்பு வேண்டுவதாகவோ அல்லது பக்தி நிரம்பியதாகவோ அமைந்திருக்கும்.
- ❖ சில கீர்த்தனைகள் புராண நிகழ்ச்சிகள் பற்றியும், பக்தர்களின் உணர்ச்சிகளைத் தெரிவிப்பதாகவும் அமைந்திருக்கலாம்.
- ❖ சபாகான உருப்படியாகிய இக் கீர்த்தனையில் ஸ்வரப்பகுதியை விட சொற்பகுதியே முக்கியமான இடத்தினைவகிக்கின்றது. அதாவது தாதுவைவிட மாதுவே முக்கியம் பெறுகின்றது.
- ❖ கீர்த்தனைக்குப் பின்பு தான் கிருதி என்ற இசைவடிவம் தோன்றியது.
- ❖ கீர்த்தனைக்குப் பல்லவி, அனுபல்லவி, சரணம் என்ற அங்க வேறுபாடுகள் உண்டு.
- ❖ சில கீர்த்தனைகள் அனுபல்லவி இல்லாமலும் இயற்றப்பட்டுள்ளன.

- ❖ கீர்த்தனைகள் ஒன்றுக்கு மேற்பட்ட சரணங்களினைக் கொண்டிருந்த போதிலும் சரணங்கள் எல்லாம் ஒரேவகையான ஸ்வரப் பகுதியினைக் கொண்டிருக்கும்.
- ❖ சில சமயங்களில் பல்லவிக்குரிய ஸ்வரப் பகுதியே சரணத்திற்கும் பயன்படுத்தப் படுகிறது.
- ❖ சாதாரண இசை அறிவுள்ளவர்களும் கீர்த்தனைகளைப் பாட முடியும்.
- ❖ எளிமையான பிரபல்யமான இராகங்களில் அமைக்கப்பட்டமையால் இவ் உருப்படியினைப் பலர் சேர்ந்து பாடுவதற்கும் உகந்தது.

கீர்த்தனையை இயற்றிய வாக்கேயகாரர்கள்

- ○ முத்துத்தாண்டவர்
- ○ கோபாலகிருஷ்ணபாரதியார்
- ○ பாபநாசம்சிவன்
- ○ பெரியசாமித்தூரன்
- ○ அருணாசலக்கவிராயர்
- ○ புரந்தரதாஸர்

கீர்த்தனைக்குச் சில உதாரணங்கள்

- ○ கற்பகமே – மத்தியமாவதி
- ○ சபாபதிக்கு – ஆபோகி
- ○ மயில்வாகனா – மோகனம்
- ○ உள்ளமிரங்கி – பந்துவராளி

# இராக இலட்சணம்

## மாயாமாளவகௌளை

- ❖ இது 15 வது மேளகர்த்தா இராகமாகும்.
- ❖ அக்னி சக்கரமாகிய மூன்றாவது சக்கரத்தில் மூன்றாவது இராகமாகும் (அக்னி – கோ)
- ❖ இதன் பழைய பெயர் மாளவகௌளம்
- ❖ கடபஜாதி சங்கைக்காக மாயாமாளவகௌளை என்று அழைக்கப்படுகின்றது.
- ❖ இதன் ஆரோகணம்:- ஸரிகமபதநிஸ், அவரோகணம்:-ஸ்நிதபமகரிஸ.
- ❖ இந்த இராகத்தில் வரும் ஸ்வரஸ்தானங்கள் ஆவன, ஸட்ஜமம், சுத்தரிஷபம், அந்தரகாந்தாரம், சுத்தமத்யமம், பஞ்சமம், சுத்ததைவதம், காகலிநிஷாதம் என்பனவாகும்.
- ❖ இது ஓர் சம்பூர்ண இராகமாகும்.
- ❖ ஸர்வ ஸ்வர கமக வரிக ரக்தி இராகமாகும்.
- ❖ க,நி ஜீவஸ்வரம், க,ப நியாசஸ்வரம்.
- ❖ ஸகதநி ஸ்வரங்களில் உருப்படிகள் ஆரம்பிக்கின்றன.
- ❖ புராதன இராகம். தோஷமற்ற இராகம்
- ❖ பல ஜன்னிய இராகங்களையுடைய ஜனக இராகங்களுள் இதுவும் ஒன்று.
- ❖ பூர்வாங்கமும் உத்தராங்கமும் ஒரே சீராய் அமைந்த இராகம்.
- ❖ கருணா இரசமும் பக்தி இரசமும் இந்த இராகத்திற்குரிய இரசங்களாகும்.
- ❖ எப்பொழுதும் பாடலாம். திரிஸ்தாயி இராகமாகும்.
- ❖ ஹிந்துஸ்தானி இசையில் இதனைப் ‘‘பைரவ தாட்’’ என்றழைப்பர்.
- ❖ தேவாரப் பண்ணில் ‘இந்தளம்’ என்பது இந்த இராகமேயாகும்.

- ❖ ஆரம்ப அப்பியாச வரிசைகளினை மாணவர்கள் முதன் முதலில் இந்த இராகத்திலே பயிலுதல் வேண்டும்.
- ❖ இதன் நேர் பிரதிமத்திம இராகம் 51 வது மேளமாகிய காமவர்த்தனி (பந்துவராளி) ஆகும்.
- ❖ இதன் ரி, ம ஆகிய ஸ்வரங்களைச் ஸட்ஜமமாக வைத்துக் கொண்டால் ரஸிகப்ரியா (72) சிம்ஹேந்திரமத்யமம் (57) ஆகிய மேளங்கள் ஒலிக்கும்.
- ❖ இவ்விராகத்தில்- 'ஆடிக்கொண்டார்....' - ஆதி- முத்துத்தாண்டவர்- கீர்த்தனை
  'தேவதேவ....' - ரூபகம்- சுவாதித்திருநாள் மகாராஜா- கிருதி.

# ஜனகஇராகம்

- ஜனக இராகத்தினை தாய்இராகம், மேளஇராகம், மேளகர்த்தாஇராகம், கர்த்தாஇராகம், இராகாங்கஇராகம், சம்பூரணஇராகம் என வேறு பெயர் கொண்டு அழைப்பர்.
- ஜனகஇராகங்கள் முக்கியமாக நான்கு இலட்சணங்களைக் கொண்டுள்ளன.
  1. சம்பூரண ஆரோகண அவரோகணம்.
  2. கிரம சம்பூர்ண ஆரோகண அவரோகணம்
  3. ஆரோகணத்தில் வரும் அதே ஸ்வரங்கள் அவரோகணத்திலும் வருதல்
  4. ஆரோகணமும் அவரோகணமும் அஷ்டகமாக இருத்தல்
- இந்த நான்கு இலட்சணங்களையுடைய ஜனகஇராகங்களின் மொத்த எண்ணிக்கை 72 ஆகும்.
- ஜனக இராகங்களுக்கு உதாரணமாக:- மாயாமாளவகௌளை (15)
  தீரசங்கராபரணம் (29)

# ஆலயங்களும் இசையும்

- ➢ இறைவனது நிருத்தமே இசை, நடனம், நாடகத்திற்கு முதற்கண்ணாய் உள்ளதென்பதை புராணங்கள் வாயிலாக அறியமுடிகிறது.
- ➢ இதிலிருந்து ஆலயங்களும் இசையும் ஒன்றோடொன்று தொடர்புடையது என்பது தெளிவாகிறது.
- ➢ முற்கால மக்கள் பலவகை இசை நுட்பங்களை அறிந்திருந்தனர்.
- ➢ கற்கோயில், மரக்கோயிலருகே வாழ்ந்த மக்கள் பாடியும் பரவசநிலையில் ஆடியும் பலவகை இசைக்கருவிகளை இசைத்தும் தமது பக்தியை இறைவனுக்குச் செலுத்தினர்.
- ➢ ''தும்புரு நாரதர் வீணை யாழ் வாசிக்க தொம்தொம் என நந்தி மத்தளம்கொட்ட''என்பதற்கமைய ஓவியங்களையும் சிற்பங்களையும் ஆலயங்களில் அமைத்தனர்.
- ➢ கோவில்களில் நாட்டிய நாடகங்களினை நடித்துக் காட்டுவதற்கென்றே கலைஞர்கள் இருந்தனர்.
- ➢ இசை வழிபாட்டின் போது சங்கு, சேமக்கலம், கின்னரம், டமாரம் ஆகிய வாத்தியங்கள் ஒலிக்க அதற்கேற்ப நடன மாதர்கள் நடனமாட மங்கள வாத்தியங்களான தவில் நாதஸ்வரம் என்பன வாசிக்கப்பட மக்கள் வழிபாடு செய்தனர்.
- ➢ ஆலயம் தோற்றம் பெற்ற காலத்திலிருந்தே ஆலயங்களில் யாழ் வாசிப்போர்கள், மங்கள வாத்தியம் வாசிப்போர், ஓதுவார்கள் பேன்றோர் இசையை வளர்த்தனர்.
- ➢ அத்தோடு யாழ், நாதஸ்வரம், தவில், முரசு வாத்தியங்கள், கொம்பு வாத்தியங்கள், சுத்தமேளம், கொத்துமணி சங்கு முதலியவை ஆலயங்களில் கையாண்ட முக்கிய வாத்தியங்களாகும்.

- அதிகாலையில் பாடப்படுகின்ற திருப்பள்ளி எழுச்சி, உற்சவ காலங்களில் நவசந்திப் பண் என்பன ஆலயங்களில் இசைக்கப் படுகின்றன.
- பஞ்சமுக வாத்தியம் ஆலய முரசு வாத்தியங்களில் பிரபல்யமானது. இது இறைவனது ஐந்து திருமுகங்களையும் உருவகித்து இவ் வாத்தியத்தை அமைத்தனர்.
- தேவார முதலிகள் காலத்தில் கூட்டுப்பிரார்த்தனை முறை இருந்தமையினை அறியமுடிகின்றது..
- நாயன்மார் காலங்களில் தேவாரப் பதிகங்களைக் கூட்டுப்பிரார்த்தனையாகப் பாடும் வழக்கம் இருந்ததாகக் கூறப்படுகிறது.
- ஆலய பூசைகளில் பஞ்ச புராணம் ஓதப்படுகிறது.
- புராணபடலம், கதாகாலசேபம், இசைக்கச்சேரிகள் போன்றனவும் இன்று நடைபெறுவதனைக் காணலாம்.
- இசைமரபு தவறாத விற்பன்னர்களால் புராணங்களை ஜனரஞ்சகமாக எடுத்துக் கூறும் மரபு தமிழ் நாட்டிலும் எமது நாட்டிலும் பிரபல்யமாகி சமய அறிவையும், இசை அறிவையும் மக்களுக்கு ஊட்டுவதில் ஆலயங்கள் பெரும் பங்கு வகிக்கின்றன.

## ☞ வழிகாட்டி - 2

# ஜதீஸ்வரம்

- ஜதிக்கோர்வைகளை ஆதாரமாகக் கொண்ட மெட்டுக்களால் அமைக்கப்பட்டமையால் இவ் உருப்படி ஜதீஸ்வரம் என அழைக்கப்படுகிறது.
- இது தாது மட்டும் கொண்ட ஓர் உருப்படியாகும். இதற்குச் ஸாஹித்யம் கிடையாது.
- ஜதீஸ்வரமானது தாதுவின் அமைப்பில் ஸ்வரஜதியை ஒத்திருக்கும்.
- ஸ்வரரூபமாகப் பாடப்படுவதால் இவ் உருப்படி ஸ்வரபல்லவி என்றும் அழைக்கப்படுகிறது.
- ஜதீஸ்வரமானது பல்லவி, அனுபல்லவி, சரணம் என்னும் அங்க வித்தியாசங்கள் கொண்டுள்ளது.
- சில ஜதீஸ்வரங்கள் அனுபல்லவி இல்லாமலும் இருக்கும்.
- ஜதீஸ்வரங்களில் 3 தொடக்கம் 5 சரணங்கள் கொண்டிருக்கும், சரணம் ஒவ்வொன்றும் வித்தியாசமான தாதுக்களில் அமைந்திருக்கும்.
- சில ஜதீஸ்வரங்கள் இராகமாலிகையாகவும் அமைந்துள்ளன.
- ஜதீஸ்வரங்கள் சில சௌக்க காலத்திலும், சில மத்திமகாலத்திலும் அமைந்துள்ளன.
- ஜதீஸ்வரங்களினைக் கற்பதனால் மாணவர்களின் ஸ்வர, லய, ஞானம் விருத்தி அடைகின்றன.
- அழகிய ஸ்வரக் கோர்வைகளினால் மனோதர்மத் திறமை விருத்தியடைகிறது.
- பாடுபவர்களோடு இசைக்கருவிகளைக் கற்கும் அனைவரும் இப்பயனைப் பெறுவர்.

### ஜதீஸ்வரத்தை இயற்றிய வாக்கேயகாரர்கள்

- ஸ்வாதித்திருநாள் மகாராஜா
- தஞ்சை கே. பொன்னையாபிள்ளை

### ஜதீஸ்வரத்திற்கு உதாரணங்கள்

- ஸ்ா , ரிகாபா - பிலஹரி
- ஸ்ா , நீதாபா - கல்யாணி
- ஸ்ா , ரீஸ்தா - ஸாவேரி
- ஸ்ா , ஸ்நிதபாம – சரஸ்வதி

# இராக இலட்சணம்

## தீர சங்கராபரணம்

- இது 29 வது மேளகர்த்தா இராகமாகும்.
- 5வது சக்கரமாகிய பாண சக்கரத்தில் 5 வது இராகமாகும். (பாண – மா)
- கடபஜாதி சங்கைக்காக தீரசங்கராபரணம் என்று அழைக்கப்படுகின்றது.
- இதன் ஆரோகணம் -ஸரிகமபதநிஸ் ,அவரோகணம்:- ஸ்நிதபமகரிஸ.
- இந்த இராகத்தில் வரும் ஸ்வரஸ்தானங்களாவன, ஸட்ஜமம், ஸதுஷ்ருதிரிஷபம், அந்தரகாந்தாரம், சுத்தமத்யமம், பஞ்சமம், சதுஷ்ருதிதைவதம், காகலிநிஷாதம் என்பனவாகும்.
- இது ஒரு சம்பூரண இராகமாகும். எல்லா ஸ்வரங்களும் இராகச்சாயா ஸ்வரங்களும் ஜீவஸ்வரங்களும்.
- ரி, ப நியாஸஸ்வரங்கள், ஸரிமப ஸவரங்களில் உருப்படிகள் ஆரம்பிக்கின்றன.
- ஸ்நிபா என்பது விஷேச பிரயோகமாகும்.
- ஜண்டைஸ்வரப் பிரயோகங்களும் தாட்டிஸ்வரப் பிரயோகங்களும் இந்த இராகத்திற்கு ரஞ்சகமானவை.
- புராதன இராகம், எப்பொழுதும் பாடலாம்.
- விரிவான ஆலாபனைக்கு இடம் கொடுக்கும் இராகம், பூர்வாங்கமும் உத்தராங்கமும் ஒரே சீராய் அமைந்த இராகம்.
- பல ஜன்னிய இராகங்களையுடைய மேள இராகங்களில் இதுவும் ஒன்று.
- ஹிந்துஸ்தானி இசையில் ‘‘பிலாவல்’’ என்றும் மேலைத் தேசத்தில் ‘‘மேஜஸ்கேல்’’ எனவும் அழைக்கப்படுகிறது.
- பண்டைத் தமிழிசையில் பண் பழம்பஞ்சுரம் என்பது இந்த இராகமே.
- வெண்பா பாட உகந்த இராகம்.
- சங்கராபரணம் நரசையா என்பவர் இந்த இராகம் பாடுவதில் தேர்ச்சி பெற்றவர்.
- இதன் நேர் பிரதிமத்திம இராகம் மேசகல்யாணி (65) ஆகும்.
- இதன் ரிகமபத ஸ்வரங்களை ஸட்ஜமமாக வைத்துப் பாடினால் கரஹரப்ரியா, தோடி, கல்யாணி, ஹரிகாம்போதி, நடபைரவி ஆகிய மேளங்கள் ஒலிக்கும்.
- சஞ்சாரி கீதம் - ஏழுமலைமேல் - திஸ்ரதிரிபுடை – டைகர்வரதாச்சாரியார்
- தானவர்ணம் - ஸாமிநின்னே – ஆதி – வீணைக்குப்பையர்.

## ஜன்னியஇராகம்

- ✓ ஜனக இராகத்திலிருந்து பிறந்த இராகம் அல்லது தோற்றம் பெற்ற இராகம் ஜன்னிய இராகம் எனப்படும்.
- ✓ ஜன்னிய இராகத்தினைப் பிறந்த இராகம், சேய் இராகம் என்றும் கூறுவர்.
- ✓ ஒவ்வொரு ஜனக இராகத்திற்கும் அனேக ஜன்னிய இராகங்கள் உண்டு.
- ✓ ஜன்னியஇராகத்தின் ஸ்வரஸ்தானங்கள் அதன் ஜனக இராகத்தின் ஸ்வரங்களை அனுசரித்தே இருக்கும்
- ✓ உதாரணமாக:- மோகனம், பிலஹரி, சுத்தசாவேரி.
- ✓ ஜன்னிய இராகமானது ஏழு பிரிவுகளைக் கொண்டது.




# கும்மி

- கும்மி அடித்தல் என்பது பெண்களிற்கே உரிய விளையாட்டாகும்,
- ''வட்டமிட்டுப் பெண்கள் வளைக்கரங்கள் தாமொலிக்கக் கொட்டியிசைத்திடுமோர் கூட்டமுதப் பாட்டு'' எனப் பாரதியார் கும்மிக்கு இலக்கணம் கூறியுள்ளார்.
- பண்டிகை நாட்களிலும், திருவிழாக் காலங்களிலும் கிராமப்புறச் சூழலில் பெண்கள் கும்மியடித்துப் பாடுவது வழக்கம்.
- கிராமியக் கலைகளில் முக்கியமானதோர் இடத்தினைக் கும்மி வகிக்கின்றது.
- குத்துவிளக்கு, கண்ணன் சிலை, பூக்கூடை போன்றவற்றில் ஒன்றை நடுவில் வைத்து அதைச் சுற்றி இளம்பெண்கள் வட்டமாகக் குனிந்தும் நிமிர்ந்தும் கைகளால் தாளம் கொட்டிப் பாடுவர்.
- இவ்விதம் விளையாடப்படும் விளையாட்டை ஒட்டியே மணிவாசகர் திருவாசகத்தில் இறைவனைப் புகழ்ந்துபாடி ஆடுவதாக திருவெம்மானை பாடியுள்ளார்.
- கும்மிப்பாடலில் ஒருபெண் முறைவைத்துப் பாட மற்றவர்கள் கூட்டாக பின்பற்றி இசைப்பர்.
- அவை ஆடலும் பாடலும் எளிமையும் அழகும் வாய்ந்தவையாக இருக்கும்.
- நாட்டார் இசைவழக்கிலிருந்து கும்மி மறைந்து போகாது அதற்குப் புத்துயிர் கொடுத்தவர்களுள் கோபாலகிரருஷ்ண பாரதியாரும் ஒருவராவர்.
- இவர் இயற்றிய சிதம்பரக் கும்மி இதற்குச் சான்று.
- சுப்பிரமணிய பாரதியாரின் பெண்கள் விடுதலைக் கும்மியும் குறிப்பிடத்தக்கதாகும்.
- கும்மியடி தமிழ் நாடுமுழுவதும் - சுப்பிரமணிய பாரதியாரின்
- சாந்துப் பொட்டு தளதளென - ' கோபாலகிருஷ்ண பாரதியார்

# கோலாட்டம்

- கோலாட்டமும் கும்மி போன்று பெரும்பாலும் பெண்களுக்கே உரிய விளையாட்டாகும்.
- கைகளில் இரு வர்ணக்கோல்களை தட்டியவாறு கும்மியைப்போன்றே பாடியாடப் படுகிறது.
- கிராமிய ஆடல் பாடல் வகைகளுள் கோலாட்டமும் ஒன்றாகும்.
- கிராமப்புறங்களில் கலைவிழாக்களிலும் கோவில் திருவிழாக்களிலும் கோலாட்டம் ஆடுவது வழக்கம்.

- கோலாட்ட வகைகளில் பின்னல் கோலாட்டம் என்று மற்றொரு வகையுண்டு.
- இவ்வகைக் கோலாட்டங்களை ஆடும்பேர்து எண்ணிக்கைக்கேற்ப நிதானமாக ஆடுதல் வேண்டும்.
- கும்மி, கோலாட்டங்களில் பலர் சுற்றி ஆடும்போது அமையும் கோலங்கள் பல வகைப்பட்டனவாயும் எழில் மிகுந்தவையாகவும் இருக்கும்.
- கோலாட்டப் பாடலுக்கு உதாரணமாக:- 'கோலாடுவோம் நாமும்…' , 'பட்டுப் பாவாடைகள் கட்டிக் கொண்டு நாமும்….'

# வாக்கேயகாரர் சரித்திரம்
# புரந்தரதாஸர்

- புரந்தரதாஸர் 1484ம் ஆண்டு கர்நாடக மானிலத்தில் புரந்தரகட என்னும் ஊரில் பிறந்தார்.
- இவரின் தந்தை பிரபல செல்வந்தரான வரதப்பநாயக்கர், தாய் கமலாம்பாள் ஆவார்.
- இவருக்கு பெற்றோர் ஸ்ரீநிவாசன் எனப் பெயரிட்ட போதிலும் சீனப்பா எனச் செல்லமாக அழைக்கலானார்.
- இவர் இளமையிலே கன்னடம், சமஸ்க்ருதம் போன்ற மொழிகளினைக் கற்றதோடு, சங்கீதக் கலையையும் முறைப்படி பயின்று பாண்டித்தியம் பெற்றார்.
- இவருக்கு 16 வது வயதில் சரஸ்வதிபாஜை பெற்றோர் திருமணம் செய்து வைத்தனர்.
- இவர் தனது 20 வது வயதில் பெற்றோரை இழந்தார்.
- இவர் தனது தந்தையாருடைய இரத்தினக்கல் வியாபாரத்தைப் பன்மடங்கு பெருக்கியமையால் இவர் ''நவகோடிநாராயணன்'' என்றழைக்கலானார்.
- இவர் கருமியாகவும், பகட்டான வாழ்வு வாழ்பவராகவும் திகழ்ந்தார்.
- வயோதிப அந்தணர் தனது மகனின் உபநயனத்திற்கு இவரை யாசித்தார்.
- எதுவித உதவியும் செய்யாது நாட்களைக் கடத்தி வந்தார் புரந்தரதாஸர்.
- பொறுமையை இழந்த வயோதிப அந்தணர் தாஸரின் மனைவியை யாசித்தார்.
- அந்தணரின் நிலைகண்டு இரங்கிய தாஸரின் மனைவி தனது மூக்கிலிருந்த அதிவிலையுயர்ந்த மூக்குத்தியைக் கழற்றிக் கொடுத்தார்.
- அந்தணர் மூக்குத்தியை தாஸரின் கடையில் விக்கச் சென்றபோது தாஸருக்குச் சந்தேகம் எழுந்தது.
- தாஸர் தனது சந்தேகத்தினைத் மனைவியிடம் தீர்க்கும் சந்தர்ப்பத்தில்தான் இவருக்கு ஞானோதயம் ஏற்பட்டது.
- 30 வயதில் ஞானோதயம் பெற்ற இவர் வியாசராஜ சுவாமிகளின் உபதேசம் பெற்றுப் பின் சத்தியதர்ம சுவாமிகளின் அனுக்கிரத்தைப் பெற்று புரந்தரதாஸர் என்னும் பெயரைப் பெற்றுக் கொண்டார்.
- இவரது முத்திரை புரந்தர விட்டல. ஏன்பதாகும்.
- புரந்தரதாஸர் ஆதிகுரு என்றும், சங்கீத பிதாமகர் என்று போற்றப்படுகின்றார்.
- ஆரம்பப் பயிற்சிக்குரிய இராகம் மாயாமாளவகௌளை என வகுத்தவரும் இவரே.
- இவரது உருப்படிகள் பெரும்பாலும் கன்னடத்திலும், வடமொழியிலும் அமைந்துள்ளன.
- சப்ததாளங்களும் இவருடைய காலத்திலே பிரசித்தி பெற்றன..
- இவர் இயற்றிய பதங்களின் எண்ணிக்கை 4,75000 என்று இவர் இயற்றிய வாசுதேவ நாமாவளி என்ற உருப்படியிலிருந்து தெரியவருகிறது.
- தற்போது 8000 பதங்கள் மட்டுமே வழக்கில் காணப்படுகிறது.
- இவரது பதங்கள் தேவர்நாமாக்கள் என்றும், தாஸர்பதங்கள் என்றும் அழைக்கப்படுகின்றன.

☞ வழிகாட்டி - 3

# ஸ்வரஜதி

- ❖ அப்பியாச கானத்தைச் சேர்ந்த உருப்படிளில் இதுவும் ஒன்றாகும்.
- ❖ பல்லவி, அனுபல்லவி, சரணம் என்னும் அங்கவித்தியாசங்கள் கொண்ட உருப்படியாகும்.
- ❖ பல சரணங்களை உடைய உருப்படிகளுள் இதுவும் ஒன்று. சரணங்கள் ஒவ்வொன்றும் வித்தியாசமான தாதுக்களில் அமைந்திருக்கும்.
- ❖ அனுபல்லவி இல்லாத ஸ்வரஜதிகளும் உள்ளன.
- ❖ இதன் ஸாஹித்யம் பகவஸ்தோத்திரமாகவோ, சிருங்காரவிஷயமாகவோ, வீரர்களைப்பற்றியதாகவோ, அல்லது வித்துவான்களை ஆதரித்த பிரபுக்களைப் பற்றியதாகவோ அமைந்திருக்கும்.
- ❖ ஸ்வரஜதிகளில் ஸாஹித்யம் மட்டும் பாடப்படும்.
- ❖ இவ் உருப்படி அப்பியாச கானத்தைச் சேர்ந்த போதிலும் சியாமா ஸாஸ்திரிகளின் தோடி, பைரவி, ஐதுகுலகாம்போதி இராகங்களில் அமைந்த ஸ்வரஜதிகள் சபாகானத்திற்கும் உகந்தவை.
- ❖ நாட்டியத்திற்காக இயற்றப்பட்ட ஸ்வரஜதிகளில் ஆங்காங்கு ஜதிகள் காணப்படுகின்றன.
- ❖ இதற்கு உதாரணம் ''ஏமாயலாடிரா'' ஹுஷேனி இராகஸ்வரஜதி.

## ஸ்வரஜதிகளை இயற்றிய வரக்கேயகாரர்கள் சிலர்

- ➢ சியாமாசாஸ்திரிகள்
- ➢ சோபனாத்ரி
- ➢ ஸ்வாதித்திருநாள் மகாராஜா
- ➢ சின்னிக்கருஷ்ணதாஸர்
- ➢ பொன்னையாப்பிள்ளை
- ➢ மெரட்டூர் வெங்கட ராம சாஸ்திரிகள்
- ➢ வாலாயாபேட்டை கிருஷ்ணஸ்வாமிப் பிள்ளை

## ஸ்வரஜதிக்கு உதாரணங்கள்

- ➢ ராவேமேமகுவ - ஆனந்தபைரவி
- ➢ சாம்பசிவாயனவே - கமாஸ்
- ➢ பன்னகசயனனெ - காம்போதி
- ➢ காமாட்ஷி - பைரவி
- ➢ ராவேஹிமகிரி - தோடி

# இராக இலட்சணம்

## மோகனம்

- இது ஓர் ஜன்னிய இராகமாகும்.
- 28 வது மேளமாகிய ஹரிகாம்போதியின் ஜன்னியம்.
- இதன் ஆரோகணம் :- ஸரிகபதஸ் ,அவரோகணம்:-ஸ்தபகரிஸ.
- இந்த இராகத்தில் வரும் ஸ்வரஸ்தானங்கள் ஆவன, ஸட்ஜமம், ஸதுஷ்ருதிரிஷபம், அந்தரகாந்தாரம், பஞ்சமம், சதுஷ்ருதிதைவதம், என்பனவாகும்.
- ஆரோகண, அவரோகணத்தில் மத்யமம், நிஷாதம் ஆகிய ஸ்வரங்கள் வர்ஜஸ்வரங்கள் ஆகும்.
- ஆகவே இது ஓர் வர்ஜஇராகம், ஔடவ இராகமாகும், உபாங்க இராகம்.
- ரி, க, த, ஜீவஸ்வரங்களாகும், க, ப நியாயஸ்வரங்களாகும்.
- ஸ, க, த ஸ்வரங்களில் உருப்படிகள் ஆரம்பிக்கின்றன.
- ஸர்வ ஸ்வர கமக வரிக ரக்தி இராகமாகும்.
- ஜண்டைஸ்வரப் பிரயோகங்களும், தாட்டுஸ்வரப் பிரயோகங்களும் இந்த இராகத்திற்கு இனிமையைக் கொடுக்கும்.
- புராதன இராகம், சுபகரமான இராகம்,
- எப்பொழுதும் பாடலாம், திரிஸ்தாயி இராகமாகும்.
- விரிவான ஆலாபனைக்கு இடம்கொடுக்கும் இராகம்.
- பண்டைத் தமிழிசையில் முல்லைப் பண் என்பது இந்த இராகமே.
- மாணிக்கவாசகரின் திருவாசகம் தொன்று தொட்டு மோகன இராகத்திலே பாடப்படுகிறது.
- எல்லாத் தேசத்து இசையிலும் பழங்காலத்திலிருந்தே இந்த இராகம் கையாளப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.
- எல்லா வகையான உருப்படி வகைகளையும் இந்த இராகத்தில் காணலாம்.
- ஸ்லோகங்கள், பத்யங்கள், விருத்தங்கள் பாடுவதற்கேற்ற இராகமாகும்.
- வர்ணனைக்கேற்ற இராகம்.
- ஹிந்துஸ்தானி இசையில் ‘‘பூப்’’என்பது இந்த இராகமே.
- இசை நாடகங்களிலும், நிருத்திய நாடகங்களிலும் காணப்படும் இராகமாகும்.
- இதன் ரி, க, ப, த ஆகிய ஸ்வரங்களினைக் கிரகபேதம் செய்தால் முறையே மத்தியமாவதி, ஹிந்தோளம், சுத்தசாவேரி, உதயரவிச்சந்திரிகா ஆகிய இராகங்கள் தோன்றும்.
- சஞ்சாரிகீதம் - வரவீணா - ரூபகம் - இராமநாதபுரம் ஸ்ரீனிவாசர்
- தானவர்ணம் - நின்னுக்கோரி – ஆதி - டைகர் வரதாச்சாரியார்

# இசைக்கருவி
## தம்புரா




- சுருதிவாத்தியங்களுள் மிகவும் சிறப்புப் பெற்ற ஓர் தந்திவாத்தியம் தம்புராவாகும்.
- தும்புரு கையாண்ட கருவி என்ற காரணத்தாலும், சுரைக்காயைக் கொண்டு செய்யப்பட்டதாலும் (சுரைக்காய்கு இன்னெருபெயர் தும்பு) தம்புரா என்ற பெயர் வந்திருக்கலாம் என ஆய்வாளர் கருத்து.
- இவ் வாத்தியத்தை தம்புரா, தம்பூரா, தம்பூரி, தம்பூரு, தம்பூர் என ஐந்து விதமாக அழைப்பர்.
- தம்புராவானது பலா மரத்தினால் செய்யப்படுகின்றது.
- முதலில் குடம் என்ற இசையொலி பெருக்கும் பகுதியைத் தயார் செய்வர்.
- பின்னர் தண்டி என்ற நீண்ட பகுதியைத் தயார் செய்து குடத்துடன் பிணைப்பர்.
- தண்டியின் இடது ஓரத்தில் (கழுத்துப் பாகத்தில்) நான்கு பிரடைகள் போடுவதற்காகத் துளைகள் இடப்படும்.
- குடத்தில் மேலுள்ள குதிரை (பாலம்) அகலமாகவும் குடத்தின் மேல் செம்மையாகப் பதிந்தும் இருக்கும்.
- குடத்தின் வலது ஓரத்திலுள்ள தந்தித்தாங்கியில் நான்கு தந்திகள் பிணைக்கப்பட்டிருக்கும்.
- அத்தந்திகள் மணிக்காயின் துவாரங்கள் வழியாக குதிரையின் மேல் செலுத்தப்பட்டு, பின் மேருவின் பாகத்திலுள்ள மற்றுமோர் குதிரையின் நடுவிலுள்ள சில துளைகள் மூலமாகச் செலுத்தப்பட்டுப் பிரடையில் சுற்றப்பட்டிருக்கும்.

- குடத்தின் மேற்பகுதியிலும் தண்டியிலும் அழகுக்காகப் பூவேலை செய்யப்பட்ட தந்தத்தைப் பதிப்பர்.
- இதற்குக் கமலவேலை என்று பொருள்.
- இத் தம்புராவானது மைசூர், மிராஜ், திருவனந்தபுரம் அகிய இடங்களில் செய்யப்படுகின்றது.
- தம்புராவின் நான்கு தந்திகளும் பாஸஸஸா என்ற ஸ்வரங்களுக்குச் சுருதி சேர்க்கப்படும்.
- நான்கு தந்திகளும் முறையே பஞ்சமம், சாரணி, அனுசாரணி, மந்தரம் என்ற பெயருமுண்டு
- மந்தரஸ்தாயிக்குச் சுருதிசேர்க்கப்பட்ட நான்காம் தந்தியனின்று ஸ்வயம்பு ஸ்வரங்கள் உண்டாவதைக் கேட்கலாம்.
- நன்றாகச் சுருதிசேர்க்கப்பட்ட தம்புராவில் இருந்து அந்தரகாந்தாரமும், சதுஸ்ருதி ரிஷபமும் தானே ஒலிப்பதைக் கேட்கக் கூடியதாக உள்ளது.
- நன்றாகச் சுருதி சேர்க்கப்பட் தம்புராவைக் கச்சேரியின் ஆரம்பத்தில் சில நிமிடங்கள் மீட்டினால் மேளக்கட்டு அல்லது மேளப்பிரார்த்தி ஏற்படும்.
- சுருதியைச் செம்மையாகக் கூட்டுவதற்காகக் குடத்தின் மேலுள்ள குதிரைக்கும் தந்தித்தாங்கிக்கும் நடுவில் நான்கு மணிக்காய்கள் உள்ளன.
- தம்புராவின் நாதம் கணீர் எனக் கேட்பதற்காக ‘‘ஜீவாளி’’என்று சொல்லப்படும் பட்டு நூல் அல்லது கம்பளி நூல் துண்டுகள் குதிரைக்கும் தந்திக்கும் இடையில் தக்க இடத்தில் வைக்கப்படும்.
- தம்புராவின் தந்திகள் ஆட்காட்டி விரலினால் மீட்டப்படும்.
- தம்புராவைச் செங்குத்தாக வைத்துக் கொண்டும் கிடையாக வைத்துக் கொண்டும் மீட்டலாம்

# கொம்புமுறி

- கொம்பு என்ற சொல் விலங்குகளின் கொம்புகள் என்ற எண்ணத்தையே பொதுவாக எமக்கு ஊட்டுகிறது.
- ஆனால் இங்கு மரங்களில் இயல்பாகவே காணப்படும் வளைதடி ஒன்றைக் குறிக்கிறது.
- நீதியற்ற முறையில் கோவலனைக் கொலை செய்த பாண்டிய மன்னனைப் பழிவாங்கி அவன் அரசாண்ட மதுரையை எரியூட்டிய பின்னரும் கோபந்தணியாது வந்த கண்ணகிக்கு இடையர் குலத்து இளைஞர்கள் கொம்பு விளையாடலைச் செய்து கண்ணகியைக் குளிர்வித்தனர்.
- இன்றும் மட்டக்களப்புப் பிரதேசத்தில் வரட்சி ஏற்படும் போது கண்ணகி தேவியை நினைத்து இவ் விளையாட்டு விளையாடப் படுவது குறிப்பிடத்தக்கது.
- இக் கொம்புமுறி விளையாடல் நடந்தால் உடனேயே நாடுகுளிர மழைபெய்து வரட்சி நீங்கப் பெறுதல் வியக்கத்தக்க ஒரு நிகழ்வாகும்.
- கொம்பு விளையாட்டுத் தொடங்கியதும் ஊர் முழுவதும் இரண்டு கட்சிகளாகிவிடும்.
- குலம், குடி அனைத்தும் மறந்து வடசேரி, தென்சேரியென்று ஒன்றுபட்டு நின்று விளையாட்டின் வெற்றி தோல்விகளை உணர்ச்சியுடன் அனுபவிப்பர்.
- வடசேரிக் கொம்பு 90 பாகைக்கு மேற்பட்ட வளைவுடையதாகவும், தென்சேரியானது அதனினும் ஒடுங்கியதான கொம்பையுடையதாக இருக்கவேண்டியது பொது விதி.
- இக் கொம்புமுறி விளையாட்டிற்குரிய கொம்புகள் ‘‘கரையாக்கு’’ என்னும் ஒரு வகை மரத்திலிருந்தே எடுக்கப்படுகின்றது.
- கொம்புமுறி விளையாட்டின் முதற்கட்டமாக போர்த்தேங்காய் அடிக்கும் நிகழ்வு நடைபெறும்.

- மறுநாள் கொம்புமுறித்தல் நிகழ்வு ஆரம்பமாகிவிடும்.
- முதல் நாள் தோல்வியடைந்த பகுதியினர் தமது புதிய கொம்புகளுக்கு மந்திரம் சொல்லிக் கொம்புகளுக்கு வலுவூட்டுவர்.
- அன்று முழுவதும் நாட்டுக் கூத்துகள், வசந்தன் ஆட்டங்கள் போன்ற களியாட்டங்கள் நடைபெறும்.
- இவ்வாறாகக் கொம்புமுறி விளையாட்டானது மட்டக்களப்பின் பல கிராமங்களிலும் முன்பு நடைபெற்று வந்தது.
- ஆனால் தற்போது மண்டூர், தம்பிலுவில், காரைதீவு, முதலைக்குடா, வந்தாறுமூலை போன்ற சில இடங்களில் மட்டுமே காணப்படுவதாக உள்ளது.
- 'ஆற்றோரம் போற மயில்….' கொம்புமுறிப் பாடலிற்கோர் உதாரணமாகும்.

# ஊஞ்சல்

- பொங்கல், வருடப்பிறப்பு போன்ற பண்டிகையில் பெண்கள் ஊஞ்சல் ஆடி மகிழ்வது வழக்கம்.
- நம்நாட்டின் கிராமங்களிலும் இந்தியாவில் நெல்லை, குமரி போன்ற மாவட்டங்களிலும் பெருவழக்கமாக இன்றும் நடைமுறையில் உள்ளது.
- ஆட்டம் ஒரே வகையாக இருப்பதனால் இதைக் கலையெனக் கொள்ளாமல் விளையாட்டெனக் கருதப்படுகிறது.
- இவ் ஆடலின்போது பாடப்படும் பாடல்கள் கலைநயம் மிக்கதாக உள்ளன.
- பெண்களுக்கே உரியதெனினும் ஆண்களும் சில சமயங்களில் ஆடுவதைக் காணலாம்.
- வாய்ப்பான மரக்கிளைகளில் இரு கயிறுகளினைக் கட்டித் தொங்க விட்டு அக்கயிற்றில் பலகையை அல்லது உலக்கையை இணைத்து இருப்புக்கு வழிசெய்வர்.
- அதில் ஒன்று முதல் நான்கு பெண்கள் வரை அமர்ந்து கொண்டு கயிற்றைப் பலமாகப் பிடித்துக் கொண்டு ஆடுவர்.
- கால் உந்தலால் ஊஞ்சல் ஆடப்படுகிறது.
- ஊஞ்சலை ஊசல், குஞ்சலம் எனவும் அழைப்பர்.
- ஊஞ்சலில் ஒருவர் பாடுவதை மற்றவர் திருப்பிப்பாடுவதையும் காணலாம்.
- சமுதாயத்தில் பெண்களின் உணர்வுகளை உடைத்துக் காட்டும் ஊஞ்சல் பாடல்களும் உள்ளன.
- எமது கலாசாரத்தில் ஊஞ்சலுக்கு ஒரு முக்கிய இடம் உண்டு.
- திருவிழாக் காலங்களில் பாடப்படும் திருவூஞ்சல் பாடலும் முக்கியமானதாகும்.
- திவாசகத்திலுள்ள பொன்னூஞ்சல் பாடலை நோக்கின் அக்காலத்தில் இறைவன்மேல் ஊஞ்சல் பாடல்கள் இயற்றிப் பாடியதைக் காணக்கூடியதாக உள்ளது.
- திருமணத் தம்பதியினரை ஊஞ்சலில் வைத்தாடும் வழக்கமும் உள்ளது.
- உதாரணமாக:- 'வண்ணவண்ணப் பட்டுடுத்தி வாழப்போறாள்…..'

# வாக்கேயகாரர் சரித்திரம்

## பாபநாசம்சிவன்

- இருபதாம் நூற்றாண்டின் தலை சிறந்த வாக்கேயகாரர் எனப் போற்றப்படுபவர் பாபநாசம் சிவன் ஆவார்.
- தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த போலகம் என்னும் கிராமத்தில் 1890ம் ஆண்டு புரட்டாதி மாதம் 26ம் திகதி இவர் பிறந்தார்.
- இவர் இராமாம்ருத ஐயர், யோகாம்பாள் ஆகியோருக்கு இரண்டாவது மகனாவார்.
- இராமையா என பெற்றோர் இவருக்குப் பெயரிட்டனர்.
- 1895ம் ஆண்டு பாபநாசம் சிவன் அவர்கள் தந்தையை இழந்தார்.
- வறுமையின் நிமித்தம் தாயை மூத்த சகோதரரான இராஜகோபாலனிடம் அழைத்துச் சென்றார்.
- இங்கேயே ஸமஸ்க்கிருதத்தை கற்றுணர்ந்து உபாத்தியாயர் பட்டம் பெற்றார்.
- சிறந்த சாரீரத்தையும், இசையார்வத்தையும் கொண்ட இராமையா நூரணி மகாதேவ ஐயரிடமும் சாம்ப பாகவதரிடமும் இசையின் ஆரம்பப் பயிற்சியினைப் பெற்றுக்கெண்டார்.
- இக் காலத்தில் நீலகண்ட சிவனின் ஆசியைப் பெற்றார்.
- பஜனைகள் செய்வதன் மூலம் தன் இசைப்புலமையை மெருகேற்றினார்.
- கோனேரி ராஜபுரம் வைத்தியநாத ஐயரிடம் ஏழு ஆண்டுகள் தங்கி அவரின் பாணியைக் கற்றுக் கொண்டார்.
- 1910 ஆம் ஆண்டு தாயை இழந்த பின் இவர் ஏழு அண்டுகள் திருப்பதிக்கும் கன்னியாகுமரிக்கும் இடையில் உள்ள ஆலயங்களைத் தரிசித்து, கண்ட இடங்களில் தூங்கி, கிடைத்ததைச் சாப்பிட்டு பஜனை பாடித் திரிந்தார்.
- 1917ல் திருமணம் புரிந்த பின்னர் பாபநாசத்தில் தங்கியிருக்கையில் தஞ்சாவூர் கணபதி ஆச்சிரமத்தைச் சேந்தவர்கள் இவரைச் சிவன் என்று அன்பாக அழைத்தனர். அன்றிலிருந்து பாபநாசம் சிவனானார்.
- திருவையாறு உற்சவத்திலும் இவரது பஜனை இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது.
- இக்காலகட்டத்திலே பாபநசம் சிவன் உருப்படிகளை இயற்றத் தொடங்கினார்.
- ‘‘உன்னைத்துதிக்க அருள்தா….’’ என்ற குந்தலவராளி இராகத்திலமைந்த உருப்படியே இவர் இயற்றிய முதலுருப்படியாகும்.
- இரமதாஸ என்பது இவரது முத்திரையாகும்.
- 1921ம் ஆண்டு தொழில் நிமித்தம் சென்னைக்குச் சென்ற இவர் மார்க்கண்டேயர் நாடகத்தைப் பாடி நடித்தார்.
- அதுமட்டுமன்றி அங்குள்ள கோவில்களுக்குச் சென்று உள்ளம் உருகப் பல பாடல்களை இயற்றிப் பாடினார்.
- இவரது பாடல்கள் அனைத்தும் மிக்க பிரபல்யம் பெற்றன.
- அதுமட்டுமல்லாது பல ஹரிகதைகளையும் சிறப்புற நடாத்தி வந்தார்.
- வட இந்தியாவிலும் இவர் தமிழிசையைப் பரப்பியவர்.
- 1930ம் ஆண்டு இவரது இசைப்புலமையைக் கண்ட பெரியார்கள் சென்னை அடையாறில் உள்ள கலாச் சேத்திரத்தில் சங்கீதம் போதிக்கும் பணிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, அப்பணியைச் சிறப்புற நடாத்தி வந்தார்.
- இவர் தமிழ், வடமொழி ஆகிய இரு மொழிகளிலும் சுமார் 400க்கும் மேற்பட்ட உருப்படிகளை இயறியுள்ளார்.

- இதில் 300 உருப்படிகள் ‘‘கீர்த்தனை மாலை’’ என்னும் பெயரில் மூன்று தொகுதிகளாக வெளியிடப்பட்டன.
- 1934ம் அண்டு முதற்பாடத் தொகுதி ஸ்வரஸாஹித்யமாக வெளியாகியது. இதே ஆண்டில் சீதா கல்யாணம் என்ற படத்திற்கு பாடல்கள் இயற்றி இசையமைத்தார்.
- 1935ம் ஆண்டு குசேலர் பாத்திரமேற்று பக்தகுசேலா படத்தில் நடிக்க ஆரம்பித்து குபேரகுசேலா, தியாகபூமி, பக்தசேதா போன்ற திரைப்படங்களில் பாடி நடிக்கலானார்.
- திரைப்படங்களுக்குப் பாடல்கள் இயற்றி கர்நாடக இசை தழுவி இசையமைக்கும் பணியில் பலகாலம் ஈடுபட்டார்.
- 1950ல் காஞ்சிப் பெரியார் சிவபுண்ணிய கலாமணிப் பட்டத்தை வழங்கினார்.
- 1960ல் இந்திய நுண்கலைக் கழகத்தினால் ஸங்கீத ஸாஹித்ய கலாமணிப் பட்டம் கிடைத்தது.
- 1962ல் இசைப்பேரறிஞர் என்ற பட்டத்தை தமிழிசைச் சங்கம் வழங்கியது.
- 1965ம் ஆண்டு சிவனின் ‘‘கீர்த்தனை மாலை’’ இரண்டாவது தொகுதி வெளிவந்தது.
- 1972ல் இந்திய அரசின் பத்மபூசன் விருதும் கிடைத்தது
- இவர் நாடகங்களுக்கு இசையமைத்ததோடல்லாது வர்ணங்கள், கீர்த்தனைகள், இராகமாலிகைகளையும் இயற்றியுள்ளார்.
- பிரபல்யமான இராகங்களிலும்,அபூர்வ இராகங்களிலும் உருப்படிகளை இயற்றியுள்ளார்.
- இவர் 2500 ற்கு மேற்பட்ட பாடல்களை 95ற்கு மேற்பட்ட இராகங்களில் இயற்றியுள்ளார்.
- இவரது ‘காணக்கண்கோடி வேண்டும் (காம்போதி), காவாவா கந்தாவா (வராளி), ஸ்ரீவள்ளி தேவ சேனாபதே (நடபைரவி), தாமதமேன், கடைக்கண்நோக்கி, கார்திகேய (தோடி), சரவண பவ (சண்முகப்பிரியா)’ எனும் கீத்தனைகள் பிரபல்யமானவை.
- தமிழிசைக்கு மாபெரும் தொண்டாற்றிய சிவன் 1973ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் முதலாந்திகதி இறைவனடி எய்தினார்.

தயாரிப்பு :
திரு.ஐ.ரவிச்சந்திரன்,
ஆசிரியர்,
யா/உசன் இராமநாதன் மகா வித்தியாலயம்

# செயன் முறை
## தரம் 9

| இல | பாடல் வரி | வகை | இராகம் | தாளம் | இயற்றியவர் |
|---|---|---|---|---|---|
| 1 | ஸா.ரி கா.ப | ஜதீஸ்வரம் | பிலகரி | ஆதி | ------------- |
| 2 | சம்போ மஹாதேவ | ஸ்வரஜதி | கமாஸ் | ஆதி | |
| 3 | ஸ்ரீராமா ஸ்ரீராமா | திவ்யநாமக் கீர்த்தனை | ஸகாணா | ஆதி | தியாகராஜ சுவாமிகள் |
| 4 | தேவ தேவ | கீர்த்தனை | மாயாமாளவகௌளை | ருபகம் | ஸ்வாதித் திருநாள் மகராஜா |
| 5 | ஒடுங்கும்பிணி | தேவாரம் | ஆரபி | ஆதி | சம்பந்தர் |
| 6 | தாயினும் நல்ல | தேவாரம் | பூபாளம் | ஆதி | சம்பந்தர் |
| 7 | அம்மையே அப்பா | திருவாசகம் | மோகனம் | ------------- | மாணிக்கவாசகர் |
| 8 | காலனிடத் தணுகாதே | திருப்புகழ் | மோகனம் | கண்டசாபு | அருணகிரிநாதர் |
| 9 | சந்தணத்தையே அரைத்து | காவடிச் சிந்து | ------------- | ஆதி (திஸ்ரநடை) | ------------- |

- "ஒடுங்கும்பிணி" என்ற தேவாரத்தின்
  - பண்:- பழந்தக்கராகம்
  - தலம்:- திருத்தூங்கானை மடம்

- "தாயினும் நல்ல" என்ற தேவாரத்தின்
  - பண்:- புறநீர்மை
  - தலம்:- திருக்கோணேஸ்வரம்

- "அம்மையே அப்பா" என்ற திருவாசகத்தின்
  - பண்:- முல்லை